[1986 மே 6

ஹோமியோபதி பட்டப் படிப்பு.

677—(*வினா எண் 2198) திமுரு. செ. செம்மலை, மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியில் பட்டப் படிப்பு துவக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்.

(ஆ) மதுரை மாவட்டம் திருமங்கலம் அரசு ஓமியோபதி மருத்துவக் கல்லூரியில் பட்டப்படிப்பு துவங்கும் செயற்குறிப்பு அரசால் 1985-86 பகுதி திட்டத்தின் கீழ் இசைவு பெறப்பட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 9-50)

திரு. செ. செம்மலை: தலைவர் அவர்களே, இந்தப் பட்டப் படிப்பில் எத்தனை மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டிருக்கிறது என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, இந்த ஓமியோபதி கல்லூரியைப் பொறுத்தவரையில் இப்போது டிகிரி கோர்ஸ் B.H.M.S. என்று Bachelor of Homoeopathy என்று இந்த ஆண்டு துவக்கவிருக்கிறோம். அதிலே 22 மாணவர்களை நாம் சேர்க்கவிருக்கிறோம்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): தலைவர் அவர்களே, வருகிற ஆண்டிலிருந்து பட்டப் படிப்பு துவங்கவிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பட்டப் படிப்பு துவங்கினாலும் இன்றைக்கு இருக்கிற டிப்ளமா கோர்சும் இருக்குமா என்று

1986 மே 6]

அறிய விரும்புகிறேன். அதேபோல அலோபதி முறையில் இருப்பதைப்போல ஓமியோபதியிலும் பார்மசிஸ்ட்கள் தேவைப்படுகிறார்கள். மருந்தாளுநர் பயிற்சி கொடுக்கிற பணியை அந்தக் கல்லூரி செய்கிறதா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, டிகிரி கோர்ஸ் வந்தால் படிப்படியாக டிப்ளமா கோர்சை எடுத்துவிட வேண்டும். அந்த அளவிற்கு படுக்கைகளுடைய எண்ணிக்கை தேவைப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் இப்போதுதான் நில ஆர்ஜிதப் பணியில் ஈடுபட்டிருக்கிறோம்.

The Commissioner for Land Administration has sent a proposal to the Government in the Revenue Department for grant of 23.43 acres of Land in Thirumangalam.

23.43 ஏக்கர் நிலம் திருமங்கலம் பகுதியில் கொடுப்பதற்கு நாம் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதற்காக

Erection of earthern bund to a height of 3 feet to prevent water from getting into the proposed side. அதுமட்டுமல்லாமல்

Construction of surplus weir channel, culverts, etc.,

இவைகள் எல்லாம் நாம் கட்ட வேண்டுமென்று திட்டமிட்டிருக்கிறோம். கட்டி முடிப்பதற்கு சில நாட்கள் ஆகும். அதற்காகத்தான் டிகிரி கோர்சை மட்டும் வைத்திருக்கிறோம். டிப்ளமா கோர்ஸ் பார்மசி கோர்சில் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: தலைவர் அவர்களே, ஓமியோபதி டாக்டர்களுக்கும். அலோபதி டாக்டர்களுக்கும் சமமாக சம்பளம் கொடுக்கப்பட்டு, அவர்களுக்கு தகுதி கொடுக்கப்பட்டிருப்பது தமிழ் நாட்டில் வரவேற்கத்தக்க நிகழ்ச்சியாக இருக்கிறபோது, தமிழகம் முழுவதும் ஒவ்வொரு மருத்துவமனையிலும் ஓமியோபதி டாக்டர்களை நியமித்து இருக்கிற இந்த அரசு, அவர்களுக்கு 'குவார்ட்டர்ஸ்' கொடுக்கிற நிலைமையையும் பரிசீலிக்கிறதா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட செயற்குறிப்பு ஒன்றும் அரசிடம் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஹோமியோபதி கல்லூரி ஆசிரியர்கள்.

678—(*வினா எண் 8914) **திரு. ப. ந. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) அரசினர் ஹோமியோபதி கல்லூரியில் பணிபுரியும் பேராசிரியர்களுக்கும், விரிவுரையாளர்களுக்கும் ஒரே சம்பளம் வழங்க அரசு உத்தரவு இட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ப. ந. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அரசினர் ஓமியோபதி கல்லூரியில் பணிபுரிகிற பேராசிரியர்களுக்கும், விரிவுரையாளர்களுக்கும் நான்காவது சம்பள கமிஷனின் சிபார்சு அடிப்படையில் சம்பளம் மற்றும் சலுகைகளை வழங்குகிற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறதா? அந்தச் சலுகைகளை இப்போது வழங்குகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, நான்காவது சம்பள கமிஷனின் யோசனைகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள். மூன்றாவது 'சம்பளக் கமிஷன்' பொறுத்தவரையில் பேராசிரியர்களுக்குச் சம்பளம் ரூ. 850—1,500 என்று இருந்தது. இப்போது நான்காவது சம்பளக் கமிஷன் பரிந்துரை மூலமாக ரூ. 1,800-ல் ஆரம்பித்து, ரூ. 2,900 வரையில் அது போகும். அதேமாதிரியாக லெக்ச்சரர்களுக்கு ரூ. 750—1,350 சம்பளம் என்பது மூன்றாவது சம்பளக் கமிஷனின் பரிந்துரை. நான்காவது சம்பளக் கமிஷன் பரிந்துரை ரூ. 1,575—2,625.